## இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம் - 2013

---

இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் அதிகாரச்சட்டத்தின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) பின்தொடர்ந்து இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது பாதகமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலாதாரங்கள் பொருண்மையாக பாதிக்கப்படலாம்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 பாதகமான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பதே எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஎஸ்/ ஐஎவ்ஆர்எஸ்)**

(அ) 2012 சனவரி 01 முதல் அமுலுக்கு வந்திருந்த புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (எல்கேஎஸ்/ ஐஎவ்ஆர்எஸ்) அடிப்படையில் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சேவைக்காலத்தை நீடிக்காமை மற்றும் இழைப்பாற்று நலன்களை செலுத்தாமை தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் ஓய்வுபெற்ற ஊழியர்களினால் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தொழில் நியாய சபைகளிலும் ஏனைய பல்வேறு நீதிமன்றங்களிலும் பதினொரு வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு **எல்கேஎஸ் 37 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்** என்ற நியமத்தில் வேண்டப்பட்டவாறு சட்டக் கடப்பாட்டிற்கான பொருத்தமான ஏற்பாடு அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் கூட்டுத்தாபனம் சட்டக் கட்டணங்களாக ரூபா 173,700 தொகையினை மீளாய்வாண்டின் போது செலுத்தியிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 250,094,284 உரிமை மீதி ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 138,494,826 உரிமை மீதியுடன் இணங்கியிருக்கவில்லை. அரசாங்க வள முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திடமிருந்து (எஸ்ஆர்எம்எஸ்) கிடைத்திருந்த நிதிகள் மற்றும் பல்வேறு அமைச்சுக்களிலிருந்து அவ்வப்போது கிடைத்திருந்த மானியங்கள் என்பன உள்ளடக்கப்பட்டிருக்காமையே ரூபா 111,599,458 வேறுபாட்டிற்கான காரணங்களாக இருந்தன.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதிய தொகை ரூபா 7,088,898 ஆனது ஊழியர் சேமலாப நிதிய அனுப்புதலில்

காண்பிக்கப்பட்டுள்ள உள்ளபடியாக செலுத்தவேண்டிய ரூபா 236,960 இலிருந்து வேறுபட்டிருந்தது. ஆகையால், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்தவேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் ரூபா 6,851,938 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) எரகம மற்றும் மஹியங்கனை தொழிற்சாலைகளின் வருமானம் பதிவுசெய்தல் மற்றும் வகைப்படுத்தல் வழுக்கள் காரணமாக முறையே ரூபா 655,662 மற்றும் ரூபா 980,165 இனால் மீளாய்வாண்டில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) 2013 செப்தம்பர் மாதத்தின் ரூபா 1,024,825 தொகையான விற்பனை வருமானம் தவறுதலாக நானாவித வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக விற்பனை வருமானமும் நானாவித வருமானமும் அத் தொகையால் முறையே குறைத்தும் அதிகரித்தும் கூறப்பட்டிருந்தன.

(உ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் படி மேலதிக இருப்புக்களும் சேதமடைந்த இருப்புக்களும் முறையே ரூபா 1,818,753 மற்றும் ரூபா 911,658 ஆகக் காணப்பட்டன. இருப்பினும், மேலதிக இருப்புக்களுக்காக எவ்வித சீரக்கல்களும் சேதமடைந்த இருப்புக்களிற்காக ஏற்பாடும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வேஉட, இலயபத்துவ மற்றும் யடியன தொழிற்சாலைகள் முறையெ 2009, 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மூடப்பட்டிருந்ததுடன் அத் தொழிற்சாலைகளில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,731,807 பெறுமதியான இருப்புக்கள் பௌதீக ரீதியில் காணப்பட்டன. இருப்பினும், நிதிக்கூற்றுக்களின் படி அத் தொழிற்சாலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த மொத்த இருப்புக்கள் ரூபா 25,475,412 ஆகும். ஆகவே, மீளாய்வாண்டிற்கான இறுதி இருப்புக்களும் இலாபமும் ரூபா 12,743,605 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(எ) 1982 மற்றும் 2001 இல் மூடிவிடப்பட்டிருந்த முறையே ஒட்டுசுட்டான் மற்றும் பங்கதெனிய ஆகிய இரண்டு தொழிற்சாலைகளில் மீளாய்வாண்டின் இறுதியில் பௌதீக இருப்புக்கள் காணப்படவில்லை. இருப்பினும், ரூபா 1,750,648 தொகையான இருப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மேற்படி இரண்டு தொழிற்சாலைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஏ) பௌதீக மெய்மையாய்வுடன் ஒப்பிடுகையில் எரகம மற்றும் ஊவவெல்லஸ்ஸ தொழிற்சாலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள பொது இருப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் ரூபா 17,056,366 ஆல் அதிகரித்துக் கூறப்பட்டிருந்த அதேவேளை மஹியங்கனை மற்றும் பிங்கிரிய தொழிற்சாலைகளில் ரூபா 27,226,060 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஐ) கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் படி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த எரகம மற்றும் மஹியங்கனை தொழிற்சாலைகளுடன் தொடர்புடைய பணிக்கொடை ஏற்பாடு ரூபா 602,428 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்த அதேவேளை உஸ்வெவ மற்றும் யடியன தொழிற்சாலைகளில் ரூபா 600,519 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஒ) நிறந்தீட்டுதல், மின்சார வேலைகள், தளபாடங்கள், திரைச்சீலைகள் போன்றவற்றிற்காக ஏற்பட்ட ரூபா 2,659,209 தொகையான புதுப்பித்தல் செலவினத்தை பராமரிப்புச் செலவினமாக அங்கீகரிப்பதற்குப் பதிலாக நாட்டுக்கு மகுடம் கண்காட்சிக்குப் பயன்படுத்தப்பட்ட எரகம இல் காணப்படுகின்ற கட்டிடத்தின் மீது மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஓ) எரகம, மஹியங்கனை, உஸ்வெவ தொழிற்சாலைகள் மற்றும் தலைமை அலுவலகம் என்பவற்றின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த மொத்தக்

காசு மீதிகள் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக காசு மெய்மையாய்வுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,537,881 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஔ) பங்கதெனிய, எலயபத்துவ, வேஉட, ஒட்டுசுட்டான் மற்றும் யடியன ஆகிய மூடப்பட்ட தொழிற்சாலைகளின் கீழ் மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான ரூபா 856,275 மொத்தக் காசு மீதிகள் பௌதீகரீதியாக கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

(∴) கூட்டுத்தாபனத்தினால் நிலையான சொத்துப் பதிவேடு முறைப்படியாக பராமரிக்கப்படாதிருந்ததுடன் சில நிலையான சொத்துக்களிற்கான பட்டோலைகள் மாத்திரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

i. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ஓட்டு அச்சுக்களின் ஆரம்ப மீதி முன்னைய ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடுகையில் ரூபா 3,364,866 ஆல் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.

ii. வாகனங்கள் பட்டோலையில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 2,162,747 பெறுமதியான 31 மோட்டார் வாகனங்கள் கூட்டுத்தாபனத்தின் வளவில் பௌதீக ரீதியில் காணப்படாதிருக்க பௌதீக ரீதியில் காணப்பட்ட 9 மோட்டார் வாகனங்கள் நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டிருந்த பட்டோலைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரையறுக்கப்பட்ட லங்கா செரமிக் கம்பனி 2002 ஆம் ஆண்டில் மூடப்பட்டிருந்த போதிலும், அம்மீதிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ரூபா 48,602,070 மற்றும் ரூபா 22,375,918 தொகைகள் முறையே பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய தொகைகளாக உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2009 ஆம் ஆண்டிலிருந்து அட்டுறுவாகவுள்ள மஹியங்கனை தொழிற்சாலையின் ரூபா 220,463 தொகையான நீர் பட்டியல்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பங்கதெனிய தொழிற்சாலை 10 ஆண்டுகளிற்கு முன்னரே மூடப்பட்டிருந்த போதிலும், ரூபா 314,673 மற்றும் ரூபா 1,069,613 தொகையான முறையே கடன்பட்டோர் மீதியும் அட்டுறு செலவினமும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலேனும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பங்கதெனிய மற்றும் எலாயபத்துவ இலுள்ள மூடிவிடப்பட்ட தொழிற்சாலைகளுடன் தொடர்புடைய முறையே ரூபா 13,363,261 மற்றும் 15,778,623 தொகையான செலுத்த வேண்டிய வரி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் காணப்பட்டது.

(உ) ஒட்டுசுட்டான் தொழிற்சாலையிலிருந்து பெறவேண்டிய ரூபா 262,167 விழா முற்பணம் 26 ஆண்டுகளிற்கும் மேலாக கணக்குகளில் வைத்திருக்கப்பட்டுள்ளது.

(ஊ) மூடிவிடப்பட்ட ஐந்து தொழிற்சாலைகளுடன் தொடர்புடைய ரூபா 33,939,592 ஒதுக்கங்கள் பொருத்தமான சீராக்கல்கள் செய்யப்படாது 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(எ) மூடிவிடப்பட்ட ஐந்து தொழிற்சாலைகளின் கீழான ரூபா 757,674 தொகை தீர்க்கப்படாது அல்லது சீராக்கம் செய்யப்படாது கடன்பட்டோரில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2008 ஆம் ஆண்டிலிருந்து எலயாபிடிய தொழிற்சாலைக்கு தனியார் நிறுவனமொன்றிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 854,658 தொகை 2014 செப்தெம்பர் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உறுதிச்சிட்டைகள், பட்டோலைகள் போன்ற போதிய தகவல்கள் இல்லாமை காரணமாக மொத்த நிர்வாகச் செலவினத்திலுள்ள ரூபா 5,778,494 அல்லது 82 சதவீதமான மத்திய நிர்வாக செலவினத் தொகையினை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியின் கருத்துரையின் படி, வேஉட மற்றும் எலயபத்துவ தொழிற்சாலைகள் 2011 இல் இலங்கை தரைப்படைக்கு கையளிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், இது தொடர்பில் எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குக் கிடைக்கவில்லை.

(இ) நிலுவை வரிகளை தீர்ப்பதற்காக தவணைக்கட்டண அடிப்படையில் மாதாந்தம் ரூபா 30,000 இனை செலுத்துதல் தொடர்பில் கூட்டுத்தாபனத்திற்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

**2.2.5 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 2009 இன் 9 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்புதல் வரி அதிகாரச்சட்டம் | 5,056,579 | நீண்டகாலமாக முன்னெடுத்து வரப்படுகின்ற ரூபா 171,759,557 தொகையான வரிகள் 2013 திசெம்பர் 31 வரையிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச்சட்டம் | | |
| | | 55,574,968 | |
| | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதாரச் சேவைகள் கட்டண அதிகாரச்சட்டம் | | |
| | 1995 இன் 36 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு வரி அதிகாரச்சட்டம் | 11,002,254 | |
| | 1996 இன் 34 ஆம் இலக்க பொருட்கள் சேவைகள் வரி அதிகாரச்சட்டம் | | |
| | | 38,406,286 | |
| | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | | |
| | | 59,488,624 | |
| | | 2,230,846 | |
| (ஆ) | 1990 இன் 6 ஆம் இலக்க மேல் மாகாண நிதிச் சட்டம் | 5,583,755 | மேல் மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய புரள்வு வரி 2013 திசெம்பர் 31 வரையிலும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 5,149,861 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 5,287,855 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 137,994 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. முன்னேற்றத்துக்கான காரணங்கள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளது.

| கணக்கு விடயங்கள் | 2013 | 2012 | வேறுபாடு (சாதகம்/பாதகம்) |
|---|---|---|---|
| வருமானம் | 77,920,760 | 112,655,859 | (34,735,099) |
| விற்பனைகள் கிரயம் | (68,764,795) | (105,380,353) | 36,615,558 |
| மொத்த இலாபம் | 9,155,965 | 7,275,506 | 1,880,459 |

| | | | |
|---|---|---|---|
| ஏனைய வருமானம் | 3,415,969 | 12,107,644 | (8,691,675) |
| செயற்பாட்டுச் செலவினம் | (7,284,079) | (14,233,289) | 6,949,210 |
| | --------------- | --------------- | ------------- |
| வரிக்கு முன்னர் தேறிய இலாபம் | 5,287,855 | 5,149,861 | 137,994 |
| | ======== | ======== | ======= |

**3.2 முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்**

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதங்கள் | 2013 | 2012 | அவதானிப்பு |
|---|---|---|---|
| இருப்புப் புரள்வு விகிதம் | 1:0.96 | 1:1.70 | இருப்புக்களை விற்பனையாக மாற்றுவதற்கு நீண்டகாலம் எடுக்கின்றமை அவதானிக்கப்பட்டது. |
| இருப்புப் புரள்வு (நாட்களில்) | 380 நாட்கள் | 214 | |

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஒன்பது தொழிற்சாலைகளில் எரகம, மஹியங்கனை, பிங்கிரிய, யடியன மற்றும் உஸ்வெவ ஆகிய ஐந்து தொழிற்சாலைகள் மாத்திரம் மீளாய்வாண்டில் இயங்கியிருந்தன. மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் அத் தொழிசாலைகளின் இலாபத் தன்மை கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| தொழிற்சாலை | ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்) | | | |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2011 | 2010 |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| பிங்கிரிய | 934,690 | (1,711,014) | (6,837,118) | (7,468,051) |
| மஹியங்களை | 1,512,804 | 3,978,017 | (20,981,620) | (15,457,782) |
| யடியன | (3,155,256) | (4,751,744) | (14,382,036) | (12,071,994) |
| உஸ்வெவ | (5,303,273) | (8,985,412) | (17,127,924) | (13,800,090) |
| எரகம | 11,651,721 | 22,720,384 | (4,148,425) | 3,825,335 |

(i) யடியன மற்றும் உஸ்வெவ தொழிற்சாலைகள் மீளாய்வாண்டில் ரூபா 8,458,529 தொகையான பாரிய நட்டத்தினை ஈட்டியிருந்ததுடன் மூலப்பொருட்கள் இன்மை காரணமாக யடியன தொழிற்சாலை மீளாய்வாண்டில் மூடப்பட்டது.

(ii) எரகம மற்றும் மஹியங்கனை தொழிற்சாலைகளின் இலாபங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே ரூபா 11,068,663 மற்றும் ரூபா 2,465,213 ஆல் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்திருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் இயங்கியிருந்த ஐந்து தொழிற்சாலைகளின் ஓடுகள், செங்கற்கள் மற்றும் ஏனைய பொருட்களின் மதிப்பிடப்பட்ட உற்பத்தி 6,519,688 அலகுகளாக காணப்பட்ட போதிலும், உள்ளபடியான உற்பத்தி மதிப்பிடப்பட்ட அலகுகளில் 3,970,921 அலகுகளாக அல்லது 61 சதவீதமாக காணப்பட்டது.

**4.2 முகாமைத்துவ வினைத்திறமையீனங்கள்**

ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புக்களை உரிய திகதியில் அனுப்பிவைக்கத் தவறியமை காரணமாக கூட்டுத்தாபனம் ரூபா 1,700,000 மிகைஅறவீட்டை லுெத்தவேண்டி யேற்பட்டிருந்தது.

**4.3 மனித வள முகாமைத்துவம்**

நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்கள் மீதான பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், மறுசீரமைக்கப்பட்ட பின்னர் அதன் பதவியணியை கூட்டுத்தாபனம் அங்கீகரித்துக் கொண்டிருக்கவில்லை. 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான கூட்டுத்தானத்தின் உள்ளபடியான பதவியணியினர் 43 நிரந்த பதவியணியினரையும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 179 பதவியணியினரையும் உள்ளடக்கியிருந்தது.

**4.4 கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்து இயங்குதல் நிலை**

பின்வரும் காரணங்களால் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமை ஐயத்திற்குரியதாக உள்ளது.

(அ) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் இறுதியிலுள்ளவாறு முறையே ரூபா 247,380,646 மற்றும் 138,494,826 தொகையான எதிர்மறையான தேறிய சொத்து நிலைமை நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் கூட்டுத்தாபனத்தின் மொத்தச் சொத்துக்களிற்கான இலாபத்தன்மை விகிதம் முறையே 1:1.9 மற்றும் 1:2.6 ஆக காணப்பட்டன.

(இ) மொத்தம் 540 ஊழியர்களில் 497 பதவியணயினர் 2012 ஆம் ஆண்டில் இழப்பீடு செலுத்துதல் மீது தன்னார்வமாக ஓய்வுபெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 43 ஊழியர்கள் நிரந்தர பதவியணியில் காணப்பட்டனர்.

(ஈ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 09 தொழிற்சாலைகளில் 04 தொழிற்சாலைகள் மாத்திரம் தற்போது இயங்கிவருவதுடன் ஏனைய 05 தொழிற்சாலைகளும் யுத்த நிலைமை மற்றும் மூலப்பொருட்கள் கிடைக்காமை காரணமாக மூடப்பட்டிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை.

### 5.2 கணக்காய்வுக் குழு

2006 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய பீஎவ்/பீஎஸ்/04(XII) ஆம் இலக்கதிறைசேரிச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தினுள் கணக்காய்வுக் குழு செயற்பட்டிருக்கவில்லை. அக்குழு வழமையாக கூடுவதனையும் முன்னைய குழுக் கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் பின்தொடரப்படுவதனையும் உறுதிப்படுத்துவதற்காக அவ்வாறான குழு தாபிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் குழுவினை நியமிப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரை அவதானம் செலுத்தியிருக்கவில்லை.

### 5.3 கொள்வனவுத் திட்டம்

கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் பாதீட்டை முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது தகுதிவாய்ந்த அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்களின் பயன்படுத்துகை
(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) பதவியணியினர் முகாமைத்துவம்